www.tamilarangam.net

"மக்களை பிரிந்த தனி மனிதர்களின்
அராஜகத்தின் மேல் காறி உமிழ்கிறேன் !

..........................................

""மறுபடி மறுபடி தவறுகள் செய்பவர்
மனிதரேயல்லர்"

..சேரன்..



# தமிழ்முரசு

TAMIL MURASU

ஆடி - ஆவணி 1989 முரசு - 5; ஒலி.10

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் முரசு 70

## உள்ளே...............................


* முரசின் பார்வையில்.........
* இலங்கைச் செய்தி.
* பதிநாலு வயது பாலஸ்தீனியப் போராளியின் கதை.
* பொருளாதாரச் சீரழிவில் சிறிலங்கா.
* சிறிலங்கா அரசு புலிகள் கூட்டுச்சதி
  தோழர் பிரேமச்சந்திரன்
* தேசத்தை விற்கும் இரண்டாவது பேச்சு வார்த்தையில் நரித்தனங்கள்.
* உலக நோக்கு
* சிறிலங்கா அரசின் தன்னிச்சையான முடிவுகளை நாம் ஏற்கமாட்டோம்.
  தோழர் பத்மநாபா
* சீனா: ஒரு பாடம்




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தோழரின் பார்வையில்

இந்திய- இலங்கை ஒப்பந்தத்தின் பின்னராவது அமைதிவந்துவிடும் என்று எண்ணி ஏங்கியிருந்த எம் மக்களின் ஆசைகளிலே மண்ணைப் போட்டது இந்தியாவைஎதிரிகளாக்கிய புலிகளின் சுயநலம்.

இக்கட்டான இந்தக் கட்டத்திலே திக்குத் திசை தெரியாத துன்ப இருட்டிலே எமது மக்கள் சிக்கித் தவித்தபோது எமது தேசத்திலே அமைதி, சமாதானம் ஆகியவற்றைக் கொண்டுவருவதற்கும், எமது மக்களுக்கு மிகக் குறைந்தபட்ச ஜனநாயக உரிமைகளையாவது பெற்றுக் கொடுப்பதற்கும் ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி உயிரைப் பணயம் வைத்து முன்வந்தது.

மாகாணசபைத் தேர்தலில் பங்குகொண்டு ஜனநாயகரீதியாக மக்களால் மாகாண அரசாக தெரிவு செய்யப்பட்டது. சமாதானத்துக்கான முன்னோடியானஎமது அமைப்பின் இந்த முயற்சிகள் புலிகளாலும் அதன் எடுபிடிகளாலும் சந்தர்ப்பவாதம் என்றும் துரோகம் என்றும் வர்ணிக்கப்பட்டன.

www.tamilarangam.net

மாகாண சபைத் தேர்தல்களின் பின்னர் எமது மண்ணில் ஏற்பட்ட மாற்றங்கள் பாராளுமன்றத் தேர்தல்களில் புலிகள் தவிர ஈரோஸ் உட்பட அனைத்துத் தமிழ் – அமைப்புக்களையும் பங்கு கொள்ள வைத்ததுடன் புலிகளின் மரண எச்சரிக்கையையும் மீறி ஏராளமான மக்களையும் வாக்களிக்க வைத்தது.

தேர்தலில் மீண்டும் மக்களின் கணிசமான ஆதரவைப் பெற்ற நாம் சிங்கள இடதுசாரி சக்திகளின் துணையுடன் பாராளுமன்றத்தை எமது பிரச்சனைகளை வெளிப்படுத்தும் அரங்கமாக பயன்படுத்த ஆரம்பித்தோம்.

ஆனால், மக்களின் பிரச்சனைகளைத் தீர்ப்பதாக கூறி வாக்குப்பெற்று அதிக இடங்களை கைப்பற்றிய – ஈரோஸ் புலிகளுக்கு பயந்து பாராளுமன்றப் படிகளிலேறாமல் இருந்தது. இன்று எம்மைப்பின்பற்றி பாராளுமன்றத்தை பயன்படுத்த ஈரோசும் முன்வந்திருக்கிறது.

எந்த விடயங்களில் எம்மைச் சந்தர்ப்பவாதிகள் துரோகிகள் என்றார்களோ இன்று அந்த விடயங்கள் மக்களின் விடிவுக்காக என்று ஒப்புக் கொள்ளப்படுகின்றன. சரியான சமயங்களில் சரியான முடிவுகளை ஈழ மக்கள்புரட்சிகர விடுதலை முன்னணி எடுத்திருப்பதும் எமது மக்களின்– விடிவுக்காகவே ஈ.பி.ஆர்.எல்.எப் உழைப்பதும் இன்று தெளிவாகியிருக்கிறது.

அதேசமயம் அரசியல் திறன் எதுவுமின்றி துப்பாக்கி நாகரீகமே குறியாக திரிந்த புலிகள் எமது துன்

www.tamilarangam.net

ப'கருக்கு காரணமானவர்களிடம் பிரிவினைக் கோரிக்கை யைகைவிட்டு இரகசிய பேரம் நடத்தும் துர்ப்பாக்கிய – நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். ஜனநாயக வழியில்பதவியை அடைய முடியாமல் பின்கதவால் அரசமைக்க முனைகின்றன ளர். மக்களை நிராகரித்து கொலை வெறி பிடித்த மன நோயாளர்களாய் அலைகின்றனர். உலகின் ஒவ்வொருபா கத்திலும் மக்களின் சிந்திக்கும், எழுதும், பேசும் உரிமைகளை தமது பலாத்காரத்தின் மூலம் அடக்கிவிடலாம் என பகல்கனவு காண்கின்றனர். இதற்கான அடிப்படைக் கார ணம் அவர்களது முழுநோக்குமே அதிகார மோகமும் சுய நலமுமே.

எனவே எமது தடைகளைத் தாண்ட இருக்கும் – ஒரே வழி நம் அனைவரது உழைப்பும், நம் மக்களுக்கா கவே பயன்பட வேண்டும்.

அன்பார்ந்த வாசகர்களே,

'தமிழ் முரசு' உங்கள் ஆக்கங்களையும் ஆதரவையும் மட்டுமல்ல நெறிப்படுத்தலையும் எதிர் பார்க்கிறது. அனைத்துத் தொடர்புகளுக்கும்....

THE EDITOR.
'TAMIL MURASU'
BOITE No: 69
7, RUE RACINE
95140 - GARGES.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# இலங்கைச் செய்தி

"அரசின் இயலாமையின் விளைவே இன்றைய நெருக்கடி"

—தோழர். பத்மநாபா

இலங்கை அரசாங்கம் இன்று எதிர்நோக்கும் நெருக்கடி, அது தனது தேர்தல் வாக்குறுதிகளை நிறைவேற்றமுடியாத இயலாமையின் விளைவாகும். அதன் பொருளாதாரச்சிக்கலில் இருந்து மக்களைத் திசை திருப்பும் பொருட்டேஅரசாங்கம் இந்திய அமைதிப்படையினை பலிக்கடா ஆக்கியிருக்கிறது. இவ்வாறு ஈ.பி.ஆர்.எல்.எவ் மத்திய குழு சார்பாக தோழர்.பத்மநாபா விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

பொருளாதார அபிவிருத்திக்கும் சனசக்தித் திட்டத்திற்கும், மக்களைத் திருப்திப்படுத்தவும், அரசாங்கத்திடம் போதிய பணம் இல்லை எனவும் இதுவே நாடெங்கும் வேலைநிறுத்தங்களும், ஆர்ப்பாட்டங்களும் உருவாக வழிவகுத்தது எனவும் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்நிலைமையை ஜே.வி.பி பயன்படுத்துவதுடன் அரச நிர்வாக இயந்திரத்தினை முடக்கவும் தீர்மானித்துள்ளது. இதில் பெரும்வெற்றி பெற்றுள்ள அவர்கள் மேலும் மேலும் பலம்பெற்று வருகிறார்கள். அவர்கள் கிட்டத்தட்ட அரசினை ஸ்தம்பித நிலைக்கு கொண்டுவந்துள்ளார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஜே.வி.பியுடனான அரசின் தவறான அணுகுமுறை அரச நிர்வாக இயந்திரம் மேலும் சீர்குலைந்து போக உதவியுள்ளது. இப்போக்கு தொடருமானால் இரத்தக்களரி ஏற்படுவது தவிர்க்கமுடியாததாகிவிடும் என்றும் அறிக்கை தெரிவிக்கிறது. (வீரகேசரி 29.6.89)

## தீவிரவாத சக்திகளினால் மலையக மக்கள் ஆபத்தான சூழ்நிலையில் இருக்கின்றனர்

-தோழர் யோகசங்கரி. பா.எம்.பி

'மலையகத் தமிழ் மக்கள் தெற்கில் உள்ள தீவிரவாதசக்திகளின் காரணமாக பதற்ற நிலையில் உள்ளார்கள்' என யாழ்.மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ். பா.உ. தோழர். யோகசங்கரி விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளார். (வீரகேசரி 29.6.89)

## சிறீலங்கா அரசு-புலிகள் உடன்பாடு

தமிழீழ விடுதலைப் புலிகளும், சிறீலங்கா அரசும் தமக்கிடையிலான பகைமைகளை முடிவுக்கு கொண்டுவந்து பிரச்சனைகளை 'பேசி'த் தீர்க்க உடன்பட்டுள்ளதாக புலிகள் சார்பில் அன்ரன் பாலசிங்கமும், அரசின் சார்பில் அமைச்சர் ஜஹப்.எ.ச் கமீதும் இணைந்து விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. ஐந்து நட்சத்திர மெரிடியன்ஹொட்டலில் புலிகள் தங்கி நடத்திய இப்பேச்சுவார்த்தைகளின் போது புலிகள் தனிநாட்டைப் பற்றி எதுவுமே பேசவில்லையென திரு.கமீத் குறிப்பிட்டுள்ளார்.

(வீரகேசரி 29.6.89)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## இந்திய – இலங்கை முரண்பாடுகள் கூர்மையடைகின்றன

இந்திய – இலங்கை ஒப்பந்தத்தின் கீழ் இலங்கையிலிருக்–கும் 50ஆயிரம் இந்திய அமைதிகாக்கும் படையினரும் – யூலை மாதம் 29ம் திகதிக்குள் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும் என சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசா தன்னிச்சையாக அறிவித்ததையடுத்து இந்தியா – இலங்கைஆகிய நாடுகளுக்கிடையேயான முரண்பாடுகள் கூர்மையடைந்துள்ளன.

சிறீலங்கா ஜனாதிபதியின் தன்னிச்சையான எந்த முடிவையும் இந்தியா ஏற்கப்போவதில்லை என்றும் இந்திய – சிறீலங்கா ஒப்பந்தத்தின் அம்சங்களை பூர்த்தி செய்யும் வ வகையில் இலங்கைத் தமிழ் மக்களுக்குரிய உரிமைகளை குறிப்பாக வடக்கு, கிழக்கு மாநில அரசுக்குரிய அதிகாரங்களை சிறீலங்கா அரசு வழங்கி தமிழ் மக்களின் பா

## இந்தியப் படையினர் வெளியேறக்கூடாது என வடக்கு – கிழக்கு எங்கும் மக்கள் ஆர்ப்பாட்டம்

தமிழ் பேசும் மக்களுக்கான உரிமைகள் வழங்கப்பட்டு தமிழ் பேசும் மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும் வரை இந்திய அமைதிகாக்கும் படை வெளியேறக்கூடாது எனக் கோரும் ஊர்வலங்கள், ஆர்ப்பாட்டங்கள் பொதுக்கூட்டங்கள் ஆகியன தொடர்ந்து வடக்கு–கிழக்குப் பகுதிகள் தோறும் நடந்து வருகின்றன. திருமலை மட்டக்களப்பு, ,வவுனியா, யாழ்ப்பாணம், உட்பட பல இடங்களிலும் பாரிய ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் மூலமும் கண்டனப் பொதுக் கூட்டங்கள் மூலமும், கையெழுத்து மகஜர்கள் மூலமும் இந்திய இராணுவம் வெளியேறுவ–தற்கான எதிர்ப்பை மக்கள் பாரிய அளவில் தெரிவித்துள்ளனர்.

www.tamilarangam.net

* வடக்கு, கிழக்கு மாகாணத்தில் 3000வீடுகள் நாலரைக் கோடி ரூபா செலவில் கட்டப்படுமென வடக்கு, கிழக்கு மாகாண அரசின் முதலமைச்சர் தெரிவித்துள்ளார்.
(தினகரன் 20.6.89)

* கொள்ளுப்பிட்டியில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் நிலையம் ஒன்றிலிருந்து பணம் பறிக்கமுயன்ற ஒரு தமிழ் தீவிரவாத வாலிபர்களில் ஒருவர் பொலிசாரிடம் சிக்கியதையடுத்து 'சயனைட்' அருந்தி தற்கொலை செய்து கொண்டார். இவர் மட்டக்களப்பை சேர்ந்த மன்னன அடையாளம் காணப்பட்டுள்ளது. (வீரகேசரி 14.6.89)

* பிரச்சனைகளைத் தீர்க்க புலிகளுடன் மட்டும் பேசினால் போதாது. சம்பந்தப்பட்ட ஏனையோருடனும் பேசவேண்டும் என சிறீலங்கா சுதந்திரக் கட்சி எம்.பி திருஜே பி. ரத்நாயக்கா பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.
(வீரகேசரி 22.6.89)

* வடக்கு, கிழக்கு மாகாணத்தின் அபிவிருத்திக்கு ஜப்பானிய அரசு தன்னாலான உதவிகளை வழங்குமென ஜப்பானியத் தூதுவர் திரு. டெசிகிசா டாகடா திருமலையில் வட. கிழக்கு மாகாண முதல்வரின் அலுவலகத்தில் நடந்த புனருத்தாபன அபிவிருத்தி மாநாட்டில் தெரிவித்துள்ளார்.
(வீரகேசரி 22.6.89)

* அவிசாவளை மாவட்ட ஐ.தே. கட்சி எம். பி திரு. பிரேமரத்தின குணசேகராவின் அந்தரங்கச் செயலாளர் திரு சித்திரசேன ஜே. வி. பியினரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.
(வீரகேசரி 24.6.89)

www.tamilarangam.net

* வடக்கு-கிழக்கு மாகாண பாடசாலைகளுக்கும், நூல் நிலை நிலையங்களுக்கும் லண்டன் 'றன்போலி' நூல்நிலைய சேவையினர் மூவாயிரம் நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர்.
(வீரகேசரி17/6/89)

* தமிழ் பேசும் பகுதிகளில் தமிழர்களைப் பாதுகாக்கவும் அங்கு அமைதியை நிலைநாட்டவும் மாற்றுவழி கண்ட பின்னர்தான் இந்திய அமைதிகாக்கும் படை இலங்கையை - விட்டுவிலக முடியும் என இந்திய உள்துறை இணை அமைச்சர் திரு. பி. சிதம்பரம் கூறியுள்ளார்.
(வீரகேசரி 26/6/89)

* தமிழ் குழுக்கள் தமக்குள் புரிந்துணர்வுடன் செயற்படாமல் மோதல்களில் ஈடுபட்டால் இன்றைய சூழ்நிலையில் எமது இனத்துக்கு பாதகமே விளையும் என டெலோ இயக்கமுக்கியஸ்தர் திரு. சிவாஜிலிங்கம் அறிக்கை விடுத்துள்ளார்.
(வீரகேசரி 26.6.89)

* அமைதிப்படை வெளியேறக்கூடாதென்று கோரி ஒரு நாள் அடையாள உண்ணாவிரதம் வவுனியாவில் 18.6.89அன்று நடைபெற்றது.
(வீரகேசரி 19.6.89)

* வடக்கு, கிழக்கில் உள்ள பாடசாலைகள், தனியார் கல்வி நிலையங்கள் யாவும் மூடப்பட்டு தமிழ் இளைஞர்கள் இராணுவப் பயிற்சிக்காக திரட்டப்படுவதாக செய்திகள்தெரிவிக்கின்றன. கடந்த 3 தினங்களில் 4ஆயிரத்துக்கும் அதிகமான இளைஞர்கள் பயிற்சிக்கு அழைத்துச் செல்லப்பட்டதாகவும், இவர்களில் எதிர்வரும் ஆகஸ் மாதம் க.பொ.த.ப.(உயர்தரம்) பரீட்சையில் தோற்றும் மாணவர்கள் விடுவிக்கப்பட்டதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.
(தினபதி 20.6.89)


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பதிநாலு வயது பாலஸ்தீனிய போராளியின் கதை.

"இஸ்ரேலியப் படையினர் ஒரு பாலஸ்தீன இளைஞனை மூர்க்கமாகத் தாக்கினார்கள். ஆனால் நாங்கள் அவர்களைத் தாக்கச் சென்றோம். அந்த இளைஞனைப் போன்றவர்கள் எம்மவர்கள் இல்லையா? இது எம்முடைய நாடு இல்லையா?"

—ஜமலா அபு ஓவா

இஸ்ரேலியர்கள் ஆக்கிரமித்திருக்கும் பாலஸ்தீனத்தின் ஒரு பகுதியாகிய காசா ([illegible]) பிரதேசம். ஏறத்தாழ நான்கு மாதங்களுக்கு முன்னர் முதல் தடவையாக அவருடைய வலது காலை இஸ்ரேலிய இராணுவத்தின் றப்பர் பூசப்பட்ட உருக்கு குண்டுகள் தாக்கின.

இரண்டாவது தடவையாக ஒரு மாதத்துக்கு முன்னர் இதுபோன்ற இன்னுமொரு குண்டு அவளது வலது கையைத் துளைத்தது. இப்போது மூன்றாவது தடவையாக இரண்டு வாரத்துக்கு முன்னர் சியோனிஸ்டுகளின் குண்டுகள் அவளது வலது வலது தோள் மூட்டை ஊடுருவியிருக்கின்றன.

www.tamilarangam.net

இந்த பதிநாலு வயதில்ல ஜமலா அபு ஹலா என்னும் இந்தச் சிறுமி பாலஸ்தீன மக்களின் இஸ்ரேலிய ஆக்கிரமிப்பாளர்களுக்கெதிரான கற்களுடனான போராட்டத்தில் மூன்றுதடவை காயமடைந்த வீராங்கனை ஆகியிருக்கிறுள். கடந்த 17 மாத காலத்தில் அவள் ஒரு சிறுமி என்ற நிலையிலிருந்து ஆக்கிரமிப்பு இஸ்ரேலிய இராணுவத்திற்கு எதிராக கற்களுடன் போராட்டம் நடத்தும் சின மூட்டப்பட்ட பாலஸ்தீன இளைய தலைமுறையின் முன்வரிசைப்போராளியாயிருக்கிறுள்.

"நாங்கள் இந்த 'மக்கள் எழுச்சி'க்காகநீண்ட நாட்களாகவே காத்திருந்தோம்" இது அவள் உறுதியான குரலில் சொன்ன சொல்.

இந்த 'மக்கள் எழுச்சி' தொடங்கிய நாள்முதல் இதுவரை 440 க்கும் மேற்பட்ட பலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அதேசமயம் பல ஆயிரக்கணக்கான பாலஸ்தீன மக்கள் அதுவும் குறிப்பாக இளைய தலைமுறையி-னர் இஸ்ரேலிய இராணுவத்தின் இரும்புக் கரங்களால்படு காயப்படுத்தப்பட்டுள்ளனர். இருப்பினும் முன்னைவிட உத்வேகத்துடன் ஆவேசம் கொண்ட பாலஸ்தீனத்தின் இளைய தலைமுறை ஆக்கிரமிப்பாளருக்கெதிராக தமது கற்களா-லான போராட்டத்தை முடுக்கிவிட்டுள்ளனர்.

இன்னுமொரு பதினேழு வயதுடைய பாலஸ்தீன இளைஞன் சுபி அபு டாகி 1987ம் ஆண்டில் இந்த மக்கள் எழுச்சி தொடங்கிய நாளிலிருந்து இதுவரை தான் 4 தடவைகள் இஸ்ரேலிய இராணுவத்தால் சுடப்பட்டதாகக்கூறுகிருன். கடந்த இரண்டு வாரங்களுக்கு ஆக்கிரமிப்பாளரின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

றப்பர் குண்டுகள் அவனது வலது முழங்காலைத் துளைத்ததால் நொண்டியபடியே நடக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளான்.

ஆனால் இந்நிலையிலும் அவன் சொல்கிறான் "நான் போகவேண்டும். இஸ்ரேலியர்களை விரட்டியடிக்க நான் போகவேண்டும். என்னுடைய நண்பர்கள் எல்லாம் அந்தச் செயலைச் செய்யும்போது நான் இங்கே சும்மா இருக்க முடியாது....."

அது மாத்திரமல்ல அவன் தொடர்கிறான். அவனுடைய ஆறுவயது தங்கை ஊலா பெப்ரவரி மாதம் 15 ம் திகதி இஸ்ரேலியக் காட்டுமிராண்டிகளின் றப்பர் குண்டு தலையில் தாக்கி நினைவு இழந்தவள் இன்றுவரை நினைவுதிரும்பா நிலையில் வைத்தியசாலையில் இருப்பதைச் சொல்கிறான். இஸ்ரேலிய இராணுவத்தினருக்கெதிராக கற்களை வீசிக் கொண்டிருந்த பாலஸ்தீன இளைஞர்களை இராணுவம் சுற்றிவளைக்க வருவதை எச்சரிக்கச் சென்றபோதே அந்த ஆறு வயது சிறுமி சுடப்பட்டாள்.

காயமடைந்த பாலஸ்தீனிய மக்களின் பலர்தாம் வெறும் பார்வையாளர்களாக நின்றபோதே இஸ்ரேலிய இராணுவத்தால் சுடப்பட்டதாக கூறுகிறார்கள். ஆனால்ஜமலா அப்படியில்லை. அவள் சொல்கிறாள் இஸ்ரேலிய இராணுவத்தினர் தன்னை தொடர்ந்து சுடுகிறார்கள் ஏனென்றால் தன் கையில் எது அகப்பட்டாலும் அதை ஆயுதமாக்கிதான் இஸ்ரேலிய இராணுவத்தை தாக்கி வருவதாக.

www.tamilarangam.net

தனக்கு கடைசியாக ஏற்பட்ட காயம் இஸ்ரேலிய இராணுவம் ஒரு பதினாறு வயது பாலஸ்தீன இளைஞனைத் தாக்கும்போது (இப்போது அந்த இளைஞன் சிறையில் ) நாங்கள் இஸ்ரேலியர்களை திருப்பித் தாக்க கட்டமாகக் கற்களுடன் சென்றபோது ஏற்பட்டதாக ஜமலா கூறுகிறுள்.

அவர்கள் அந்த இளைஞனை அடித்துக் கொண்டிருந்தார்கள். அதனால் நாங்கள் அவர்களிடம் சென்றோம் அவர்களை தாக்க முயன்றோம். அடிவாங்கியவர்கள் எமது இளைஞர்களில்லையா? இது எமது தேசம் இல்லையா?

ஜமலா தனக்கு இந்த போர்க்குணம் தன்னுடைய ஆறு சகோதரர்களில் மூத்தவனான பரீட் மூலமே வந்தது என்று கூறுகிறுள். பரீட் இப்போது இஸ்ரேலுக்கெதிரான நடவடிக்கைகளில் ஈடுபட்டான் என்ற குற்றச்சாட்டின்பெயரில் ஆக்கிரமிப்பாளர்களால் நான்கு வருடச் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு அனுபவித்து வருகிறுன்.

'நான் சிறைக்கு என்னுடைய சகோதரனைபார்க்கச் செல்லும்போது அவன் எனக்கு பல விடயங்களைவிளங்கப்படுத்துவான். நாங்கள் அரசியல் பற்றிப் பேசுவோம்' எனவும் ஜமலா கூறுகிறுள்.

ஜமலாவின் மற்ற மூன்று சகோதரர்கள் சியோனிஸ்டுகளால் குறைந்த காலத் தண்டனைக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். இதில் ஒருவர் மீண்டும் ஆக்கிரமிப்பாளர்களால் தேடப்படுவதால் அவர்கள் மறைந்து வாழ்கிறார்கள் ஐந்தாவது சகோதரன் இரண்டு வாரத்துக்கு முன்னுள்தான் ஆக்கிரமிப்பாளர்களால் பிடிபட்டுள்ளான். கடை


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சிச் சகோதரன் மொகமட்டுக்கு 10 வயது.

இஸ்ரேலியர்கள் எமது வீட்டுக்கு நள்ளிரவு நேரங்களில் எனது சகோதரர்களைத் தேடி வருகிறார்கள். அது மாத்திரமல்ல அவர்கள் எனது சகோதரர்கள் தொடர்ந்து எம்மீது கல்வீசுகிறார்கள். நாங்கள் அவர்களை கைது செய்யாமல் விடப்போவதில்லை எனவும் மிரட்டுகின்றனர். என்றும் ஜமலா கூறுகிறாள்.

அது மாத்திரமில்லை 'என்னைப் பொறுத்தவரை இளைஞர்களைப் பற்றியோ, காதலைப் பற்றியோ அல்லது திருமணத்தைப் பற்றியோ எனக்கு நினைக்க நேரமில்லை என்னுடைய நோக்கமெல்லாம் முதலில் பாலஸ்தீனத்தை விடுதலை செய்ய வேண்டும். பின்னர் பாலஸ்தீன இராணுவத்தின் ஒரு அங்கமாக வேண்டும்' இதுதான் ஜமலாவின் இலட்சியம்..

*************************************

வெறிபிடித்த மனித மிருகங்களால் வெலிக்கடையில் வெட்டி வீழ்த்தப்பட்ட ஈழத்தின் உரிய போராளிகளை நினைவு கூர்வோம்.

www.tamilarangam.net

# பொருளாதார சீரழிவில் சிறீலங்கா

எரிந்து கொண்டிருக்கும் இலங்கையின் இனப் இனப்பிரச்சனைக்கோ அன்றி பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகளுக்குமோ எந்தவித தீர்வையும்வைப்பதற்கு முடியாத சிறீலங்கா அரசாங்கம் இப்போது தன்னைக் காப்பாற்றிக் கொள்வதற்காக நரித்தனமான சதிகளில் ஈடுபட்டுள்ளது.

தமிழ் பேசும் மக்களின் பிரச்சனைக்கு மிகக் குறைந்த பட்சத் தீர்வையாவது வழங்கக்கூடிய மாகாண சபை அமைப்புக்கு எந்தவித அதிகாரத்தையும் வழங்க மறுக்கும் அதே வேளையில் சீரழிந்த பொருளாதாரக் - கொள்கையினால் சிங்கள மக்களில்பெரும்பான்மையினரை வறுமைக் கோட்டுக்குக் கீழ்தள்ளி, வேலையில்லாப் - பிரச்சனை, பண வீக்கம், வாழ்க்கைச் செலவுஉயர்வு ஆகிய பொருளாதாரப் பிரச்சனைகளுக்குள் தள்ளியும் வீழ்த்தியிருக்கிறது.

இந்நிலையில் தான் தலைகுப்புற வீழ்வதிலிருந்து தப்பிக் கொள்வதற்கும், கட்சிக்குள் ஏற்பட்டிருக்கும் குத்து வெட்டுகளைத் திசை திருப்பவுமே ஜே.வி.பி. க்கு போட்டியாக சிறீலங்கா ஜனாதிபதி பிரேமதாசஇந்திய எதிர்ப்புவாதத்தைக் கட்டவிழ்த்துவிட்டுள்ளார். சிறீலங்கா அரசின் இந்த நரித்தனத்தையும், சீரழிந்த பொருளாதாரத்தையும், உதிர்ந்து கொட்டப்போகும்


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அரச பொறியமைப்பையும் மூடிமறைத்து புலிகளும் அரசுக்கு வக்காலத்து வாங்கிவருகின்றனர்.

1977ம் ஆண்டில் 1060 கோடி ரூபாவாக இருந்த சிறீலங்கா அரசின் வெளிநாட்டுக் கடன் 1989 இல் 11280 கோடி ரூபாவாகியிருக்கிறது. 1977ம் ஆண்டில் 1400 கோடி ரூபாவாகவிருந்த உள்நாட்டுக் - கடனே 1989ல் 9000 கோடி ரூபாவாகியிருக்கிறது

1988ம் ஆண்டு எதிர்பார்க்கப்பட்ட பொருளாதார வளர்ச்சி 5.5%. ஆனால் ஏற்பட்டதோ 2.7% வளர்ச்சி 1989ம் ஆண்டு இது 1.5% ஆகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

1987ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் ஏற்பட்டபற்றுக்குறை 21,749 மில்லியன் ரூபா. ஆனால் 1988இல் ஏற்பட்ட பற்றுக் குறையோ 34,553 மில்லியன்ரூபாவாகும்.

இன்று இலங்கையின் அனைத்துப் பிரஜைகளுமே தலா 13,545 ரூபா கடனாளியகின்றனர். இதுமாத்திரமல்ல இலங்கையின் சிறுவர்களில் 46% மாணவர்களும்மொத்த சனத் தொகையில் 30% மானவர்களும் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளார்கள்.

இந்த உண்மைகளை மூடி மறைத்து சிறீலங்கா அரசு தன்னுடைய மக்களை மாத்திரம் ஏமாற்றவில்லை பொய்யான வாக்குறுதிகளைக் கொடுத்து பெருமளவு கடன்களைப் பெற்று உலகநாடுகளையும் ஏமாற்றியுள்ளது. இதன் காரணமாகவே கடந்த மே மாத இறுதியில்

www.tamilarangam.net


வாசிங்டனில் நடைபெற்ற சர்வதேச நாணய சபைக் கூட்டத்திற்கு போகாமல் சிறீலங்கா நிதியமைச்சர்முக் காடு போட்டுக்கொண்டு ஒளித்துக் கொண்டார். சிறீ லங்கா அரசின் ஏமாற்று வேலைகளைக் காரணம்காட் டிக் மேற்படி அங்கீகரித்த 87 மில்லியன் டொலர்வழ ங்களை தடைசெய்தும் உள்ளது.

சிறீலங்கா அரசாங்கம் தன்னுடைய எஜமானர்களில்ஒன் றான சர்வதேச நாணய சபையிடம் இந்த கடன்தொ-கையை மண்டியிட்டு பெறும்போது பொய்யான ப பல வாக்குறுதிகளை வழங்கியது. இவற்றில் சிலஇதேஇதோ 1988ம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் துண்டு விழும் தொகையை நாட்டின் மொத்த உற்பத்தியின்11%மாக குறைப்பதாகச் சொன்னது. ஆனல், அது 1988இல் 15%மாக்வும் இவ்வருடம்17%மாகவும் அதிகரிக்கும்என எதிர்பார்க்கப்படுகிறது. இதுபோலவே அரசின் நடை முறைக் கடன்கள் மொத்த உற்பத்தியின் 6%மாககுறை கப்படும் என்று அரசு பொய் கூறியது. ஆனல், அது இன்று 9%மாகி விட்டது. இதுபோலவே பண வீக்கம் 7.5%மாக இருக்கும் என்று வாக்குறுதியளித்தது.ஆனல் இன்று பணவீக்கம் 20%. இந்த நிலையில் அரசாங்கம் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள 87 மில்லியன்டொலரு ருக்கு அதிகமான கடனை இரு அரச வங்கிகளிடமிருந்து பெற்றுள்ளது. இன்றைய நிலையில் அரசிடமிருக்கும்நிதிக் கையிருப்பு எதிர்வரும் ஆறுவாரங்களுக்கு பொருட்களை இறக்குமதி செய்யவே போதுமானது. சீர்குலைந்து -போன பொருளாதாரத்துக்கு முண்டுகொடுக்க சில வேளை ஏற்கனவே பெறுமதியற்றுப்போன தனது நாண

www.tamilarangam.net

யத்தை மேலும் 20%ஆல் பெறுமதியிறக்கம்செய்யலாம்

இத்தகைய உதிர்ந்து கொட்டும் ஒரு நிலையில் தான் உலக அரங்கில் இருக்கும் இந்திய எதிர்ப்பு நாடுகளின் உதவியைப் பெறவும், இத்தகைய பொருளாதாரச்சீர ழிவுகளால் மக்கள் கொதித்தெழுவதிலிருந்து அவர்களை திசைதிருப்பவுமே அரசு இன்று தன்னுடைய இந்தியஎதிர் ப்பு என்னும் நரித்தனத்தை அரங்கேற்றுகிறது.



www.tamilarangam.net

# சிறீலங்கா அரசு

# புலிகள் கூட்டுச்சதி

## அம்பலப் படுத்துகிறார் - தோழர் பிறேமச்சந்திரன்

பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்டப் பிரேரணை மீதான விவாதத்தில் கலந்து கொண்ட யாழ். மாவட்ட ஈ.பி.ஆர்.எல்.எவ் பாராளுமன்ற உறுப்பினரான தோழர் பிரேமச்சந்திரன் ஆற்றிய உரை.

பேச்சுவார்த்தைகளில் கலந்துகொள்வதற்காக தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அரசாங்கம் பலகோடி ரூபாவை சந்தோசமாக வழங்கியிருக்கிறது. ஏனைய இயக்கங்களை அழித்தொழிப்பதற்கு அரசு புலிகளுக்கு பெருந்தொகையான ஆயுதங்களையும் வழங்கியுள்ளது.

அவசரகாலச் சட்டத்தின் மூலம் கடந்த பல ஆண்டுகளில் - வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஆயிரக்கணக்கான அப்பாவிகள் படுகொலை செய்யப்பட்டனர். ஆயிரக்கணக்கானோர் பல்வேறு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டனர்.

அரசு தன்னால் சாதிக்கமுடியாததை அவசரகாலச் சட்டத்தின் மூலம் சாதித்துக் கொண்டது. அரசு தன்னைப் பாதுகாத்துக் கொள்ளவும் தன் சொந்தலாபம் கருதியுமே அவசரகாலச் சட்டத்தை அமுல்படுத்தியது.
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்துக்குமிடையே. முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் முடிவடைந்து தற்போதுஇரண்டாம்கட்டப் பேச்சுவார்த்தைகளும் ஆரம்பமாகியுள்ளன.

எனினும் இப்பேச்சுவார்த்தைகள் பற்றி விபரங்கள் எதுவும்வெளியிடப்படவில்லை. மர்மமாகவே இருக்கின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

புலிகள் இயக்கத்தை ஜனநாயக வழிக்கு கொண்டுவருவதற்காகவே பேச்சுவார்த்தைகள் நடத்தப்படுவதாகவே அரசு கூறிவருகிறது.

அரசின் எதிர்பார்ப்பின்படி உண்மையிலேயே புலிகள் இயக்கத்தினர் ஜனநாயக வழிக்குத் திரும்புவார்களா எனக் கேட்கவிரும்புகிறேன்.

புலிகள் இயக்கத்தினர் தாம் ஜனநாயக நீரோட்டத்தில்கலந்து கொள்ளப்போவதாக எப்போதாவது வெளிப்படையாக அறிவித்துள்ளார்களா?

வவுனியா மாவட்டத்தில் உள்ள ஒட்டிசுட்டான் என்ற இடத்தில் 3.7.89அன்று சிறீலங்கா இராணுவம் புலிகளுக்கு ஒருதொகை ஆயுதத்தை வழங்கியுள்ளது என்று செய்திகள் சொல்கின்றன

அரசுடன் ஐந்து நட்சத்திர ஹொட்டல்களில் பேச்சுவார்த்தை நடத்துபவர்கள் வடக்கு கிழக்கில் மூன்று நாட்களுக்கு சிவில்நிர்வாகத்தை நடத்தக்கூடாது என உத்தரவு போட்டுவிட்டுவந்தே பேச்சுவார்த்தைகளில் கலந்து கொள்கின்றனர்.

அரசுடன் முதற்கட்டப் பேச்சுவார்த்தைகள் நடந்து கொண்டிருக்கும்போது யாழ்ப்பான அரசாங்க அதிபர் பஞ்சலிங்கம் புலிகளால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

பஞ்சலிங்கத்தின் கொலைக்கு புலிகள் தான் பொறுப்பாளிகள் எனத் தெரிந்திருந்தும் அரசு அதனைக் கண்டிக்கத் தவறியதேன்?

www.tamilarangam.net

சிவில் நிர்வாகத்தைக் குலைப்பவர்களுடனும் தொடர்ந்து படுகொலை செய்பவர்களுடனும் அரசு மேலும் மேலும் பேச்சு வார்த்தைகளை நடத்திவருவது ஏன்?

வவுனியாவில் புலிகள் இயக்கத்தினரால் அண்மையில் விரட்டியடிக்கப்பட்ட சுமார் 40 குடும்பங்களுக்கு நாமே இன்று பாதுகாப்பு அளித்துவருகிறோம்.

இந்தியப் படையினரை இங்கிருந்து வெளியேற்றக்கோரி இன்று நாடு முழுவதும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படுகின்றன. இந்தியப் படைகள் வெளியேற வேண்டுமென்று பல்வேறு அமைப்புக்களும் குரல் எழுப்பிவருகின்றன.

அந்நியநாட்டுப்படை ஒன்று எமது மண்ணில் நிலைகொண்டிருப்பதை நாமும் ஏற்றுக்கொள்ளவில்லை.
எனினும் ஜனநாயக முறைப்படி தெரிவு செய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாணசபைக்கு உரிய அதிகாரத்தை வழங்கி அப்பகுதி மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரை இந்தியப் படையினர் இங்கிருந்து வெளியேறக்கூடாது. இதனை நாம் அனுமதிக்கவும் மாட்டோம்.

வடக்கு கிழக்கு மாகாணசபைக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை வழங்கி அப்பகுதி மக்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டால் இந்தியப்படையினரை வெளியேறக்கோரி நாமும் குரல் எழுப்புவோம்.

www.tamilarangam.net

# தேசத்தை விற்கும் இரண்டாவது கட்டப் பேச்சுவார்த்தையில் நரித்தனங்கள்

சிறீலங்கா அரசுடன் இரண்டாவது கட்டப் பேச்சு வார்த்தைகளை முடித்துக்கொண்டு புலிகளில் ஒரு பிரிவினர் காட்டுக்கும், மற்றப் பிரிவான பாலசிங்கம் அன்ட்கொம் பனி வெளிநாட்டுக்கும் போய்விட்டனர்.

ஆனால், இதுவரை என்ன கதைத்தார்கள், எதைப் பற்றிக் கதைத்தார்கள் என்பது பற்றி யாருமேஎதையுமே மக்களுக்குச் சொல்லவில்லை.

மக்களுக்குத் தெரியாமல் மறைத்துவைத்து கதைத்தவிடயம் தான் என்ன? அறிக்கைகளில் இருதரப்புமேமாறி மாறி புகழ் மாலை சூட்டிக் கொண்டது தெரியும்.

'புலிகள் எங்கள் நெருங்கிய நன்பர்கள்' என்று ரஞ்சன் விஜேவர்த்தன பாசமழை பொழிகிறார். 'புலிகள் சிறீலங்கா அரசுக்கெதிரான 17 வருடப் பகைமையைவிட்டுவிட்டார்கள்' (அப்படியென்றால் தனிநாட்டுக் கோரிக்கையை கைவிட்டு விட்டார்கள் என்று தானே அர்த்தம்) என்று பிரேமதாசா ஆனந்தக் கூத்தாடுகிறார். இதை விட ஒருபடி மேலே போய் புலிகளின் பிரித்தானிய அரசியல்

www.tamilarangam.net

ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் 'எந்த அரசியல் தலை தலைவரும் சாதிக்காததை பிரேமதாசா சாதித்துவிட்-டார் ' என்றும் அவரது அரசு தமிழ்ப் பகுதிகளில் அமைதியையும், சமாதானத்தையும் கொண்டு வருவதில் மிகுந்த ஆர்வம் காட்டுகிறது' என்று புகழ்மாலை சூட்டியுள்ளார்.

இது வெளியால் தெரிந்த விடயங்கள். இது மாத்திரமல்ல மக்களுக்காக 'தாம் மாத்திரமே' துன்பங்களை அனுபவிக்கும் புலிகள் ஐந்து நட்சத்திர விடுதியில் சொகுசாக இருந்து பேச்சுவார்த்தை நடாத்த ஹில்ரன் ஹொட்டலுக்கு அரசு செலவழித்தது 17இலட்சம் ரூபா என்றும் ரஞ்சன் விஜேவர்த்தன தெரிவித்திருக்கிறார். அத்தோடுபுலிகளுக்கு பாதுகாப்பு யார் தெரியுமா? கிழக்கு மாகா-ணத்திலே குறிப்பாக மட்டக்களப்பு பிரதேசத்திலே ஏராளமான எம் மக்களைக் கொன்று குவித்து அடக்குமுறைக்-குப் பேர்போன எஸ். ரி. எவ் எனப்படும் விசேட அதிரடி படையாகும்.

முதலாவது கட்டப் பேச்சுவார்த்தையில் ஏராள-மான பணம், ஆயுதங்களை சிறீலங்கா அரசு புலிகளுக்கு - வழங்க புலிகள் தனிஈழக் கோரிக்கையைக் கைவிட்டு வட மாகாணத்தை மட்டும் திருப்தியுடன் பெற்றுக்கொள்ள சம் மதித்தது தெரிந்ததே.

மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு கிழக்கு மாகாண சபையை கலைத்துவிட வேண்டும், இந்திய அமைதிகாக்கும் படையை வெளியேற்றவேண்டும் என்ற விடயங்களில் எல்லாம் இரு தரப்புமே வெகு நெருக்கமாக கை கோர்த்து இருந்தன.


தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அதேசமயம் பல நரித்தனமான விடயங்கள் உள்ளுக்குள் நடந்திருக்கின்றன. ஈ.பி.ஆர்.எல்.எவ் உட்பட இதர தமிழ் அமைப்புக்களை அழிக்க அரசு ஆயுதங்களையும், பணத்தையும் வழங்க புலிகள் பெற்றிருக்கின்றனர்.

வடக்குகிழக்கு மாகாண அரசைக் கலைக்கவேண்டுமென்ற புலிகளின் கோரிக்கையை நிறைவேற்ற சிறீலங்கா அரசு அவசரகால நிலையை மீண்டும் பிரகடனப்படுத்தியது.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக இந்திய அமைதிகாக்கும் படை தமிழ்மக்களின் பாதுகாப்புக்கு உத்தரவாதம் கிடைக்கும் வரை வெளியேறக்கூடாது எனஉரத்த குரலில் கூறிய த.வி.கூட்டணித் தலைவர்கள் புலிகளால் கொலை செய்யப்பட்டதும் இச்சதியின் ஒரு அம்சமே தந்திரமாக அரசு தணிக்கை விதிகளை அமுல்செய்து இக்கொலைகள் தொடர்பாக புலிகளின் பெயர் அடிபடாமல் பாதுகாத்துள்ளது.


இப்படியாக முதலாம் கட்டப் பேச்சுவார்த்தையில் தேசத்தை விற்றவர்கள். இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தைகளின் பிரகாரம் தமிழ் அரசியல்வாதிகளையும், இதர விடுதலை அமைப்புக்களையும் அழிக்க முற்பட்டுள்ளார்கள்.

இப்போது மூன்றாவது கட்டப் பேச்சு வார்த்தை தொடரும் என்றும் அறிவித்திருக்கிறார்கள்.

www.tamilarangam.net

கேவலம் வெறும் அதிகார சுகத்திற்காக தேசத்தையும், மக்களையும் விற்று வாழ முற்படும் புலிகள், இந்திய எதிர்ப்பு அலையை உருவாக்கி அதன் மூலம் அமெரிக்க, பிரித்தானிய ஏகாதிபத்தியங்களுக்கு கால்கழுவி அவர்களை ஆரத்தி எடுத்து எமது தேசத்திற்குள் வரவேற்கும், புலிகளின் தேசபக்த வேசம் இப்போது கலைய ஆரம்பித்துவிட்டது. அவர்களுடைய தமிழீழ வியாபாரம் இனிஎந்தச் சந்தையிலும் விலை போக முடியாத நிலை வந்துவிட்டது.

இந்தத் துரோகங்களுக்கு மக்களே பதிலளிப்பார்கள்.



www.tamilarangam.net

# உலக நோக்கு

பிரான்சு.

## சோவியத் தலைவரின் பிரெஞ்சு விஜயம்

சோவியத் ஜனாதிபதி மிக்கைல் கோர்பச்சேவ் மேற்கொண்ட 3நாள் பிரான்சு விஜயம் வெற்றிகரமானதாக அமைந்தது. இவ்விஜயத்தின் மூலம் சோவியத் யூனியனுக்கும் பிரான்சுக்குமிடையிலான உறவுகள் நெருக்கமடைந்துள்ளன. தோழர் கோர்பச்சேவின்இந்த விஜயத்தின்போது பிரான்சுக்கும் சோவியத்யூனியனுக்குமிடையில் பொருளாதார, கலாச்சார பரிவர்த்தனைகள் தொடர்பாக 25 ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன.

பிரெஞ்சு ஜனாதிபதி திரு.பிரான்சுவா மித்தி - ரோனுடன் நீண்ட பேச்சு வார்த்தை நடத்திய சோவியத் தலைவர் பல வைபவங்களிலும் கலந்து கொண்டார். பிரெஞ்சுப் புரட்சியில் முக்கியத்துவம் வாய்ந்தஇடமான பஸ்ரிலில் வைத்து சோவியத் தலைவர் உரையாற்றும்போது பிரெஞ்சுப் புரட்சியின் 200வது ஆண்டு காலக் கட்டத்தில் தமது பிரெஞ்சு விஜயம் அமைந்திருப்பதுகண்டு மகிழ்வதாகக் கூறிய அவர் ஜனாதிபதியின் வாசஸ்தலத்தில் நடந்த இரவு விருந்தின்போது பிரெஞ்சுப் புரட்சியின் இந்த200வது ஆண்டு கொண்டாடங்களில் தாம்முழு உரிமையுடன் பங்குபற்றுவதாகவும் கூறினார். பிரெஞ்சுப்

www.tamilarangam.net

புரட்சிக்கும், போல்சுவிக்குப் புரட்சிக்குமிடையிலானவ வரலாற்றுத் தொடர்புகள் இந்த உரிமையைத் தருவ தாகக் கூறிய அவர் பிரெஞ்சுப்புரட்சியே சோவியத்யூ னியனில் சமூகமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு தூண்டுகோ லாக அமைந்தது என்றும் கூறினர்.

## பிரெஞ்சுப் புரட்சியின் 200வது ஆண்டுக் கொண்டாட்டங்கள்

உலக வரலாற்றிலேயே முக்கியத்துவம்வாய்ந்த பிரெஞ்சுப் புரட்சியின் 200வது ஆண்டு (1789- 1989) கொண்டாட்டங்கள் மிகப்பாரிய அளவில்பாரிசில் கொண்டாடப்படுகின்றன. ஏராளமான பொருட் செல வில் வடிவமைக்கப்பட்ட இவ்வைபவங்களில் 35 நாடுக ளின் தலைவர்கள் கலந்து கொண்டனர். பெருந்தொ-கையான மக்கள் கலந்து கொண்ட இவ்வைபவங்களில், விசேட பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அதேசமயம் அரசின் இந்த ஏற்பாடுஇடதுசாரி அமைப்புகளால் வன்மையாகக் கண்டிக்கப்பட்டுள்ளன. அரசின் இக் கொண்டாட்டங்கள் செல்வந்தரை மையப் படுத்தியே அமைக்கப்பட்டிருக்கின்றன என்று- கொண் டாட்டங்களில் கலந்துகொள்ளும் வெளிநாட்டுத் தலை-வர்களிடையே கம்யூனிச மற்றும் சோசலிச நாடுகளின் தலைவர்கள் யாரும் இல்லை என்றும் கண்டித்த இடது சாரி அமைப்புக்கள் பிரெஞ்சுப் புரட்சி ஏழைகளுக்கா கக் மேற்கொள்ளப்பட்டதே ஒழிய செல்வந்தர்களை மேம்படுத்த அல்ல என்றும் கண்டித்துள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நமீபியா.

நமீபியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சியில் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம்

தென்னாபிரிக்க இனவெறியரசின் அடக்குமுறைக் கொடுமைகளில் சிக்கித் தவித்த நமீபிய மக்களின்வாழ்வில் அமைதி ஏற்படுவதற்கான சூழ்நிலைகள் தென்படுகின்றன. என்றழைக்கப்படும் தென்மேற்கு ஆபிரிக்க மக்கள் இயக்கம் காலங்களில் எடுத்த போராட்ட முன்னெடுப்புகளால் ஐக்கிய நாடுகள் சபையின் துணையுடன், நமீபியாவை ஆக்கிரமித்திருந்த தென்னாபிரிக்கா வெளியேற்றப்பட்டதுடன் இதர ஆபிரிக்க நாடுகளில் வாழ்ந்தபல்லாயிரக்கணக்கான நமீய அகதிகள் நாடு திரும்பவும்ஆரம்பித்துள்ளனர்.

நமீபிய மக்களின் எதிர்கால நலன்கள் குறித்த பரந்த நோக்குடன் SWAPOவும் தனது ஆயுதப்போராட்டத்தைக் கைவிட்டு ஜனநாயக நீரோட்டத்தில் கலந்து எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவிருக்கும் தேர்தல்களில் பங்குபற்றவிருக்கிறது. SWAPOவின் பாரிய பிரச்சாரக் கூட்டங்களில் ஏராளமான மக்கள் கலந்து வருவதும் அதேசமயம் SWAPOவே இத்தேர்தலில் வெற்றிபெறப்போவதும் குறிப்பிடத்தக்கது.

அதேசமயம் சமீபத்தில் இங்கிலாந்துக்கு விஜயம் செய்த SWAPO தலைவர் சாம்நுஜோமாவுக்கு ஒருநாட்டின் தலைவருக்கு அளிக்கும் கௌரவமான செங்கம்பளவரவேற்பு அளிக்கப்பட்டது. திரு.நுஜோமா நமீபியாபற்

www.tamilarangam.net

பற்றி பேசுகையில் SWAPO வின் மத்திய குழு உறுப்பினர்கள் 18 பேரில் 10பேர் நமீபியாவுக்கு ஏற்கனவே சென்றுவிட்டதாகவும் தாமும் மற்றவர்களும் விரைவில் செல்லப்போவதாகவும் குறிப்பிட்டதுடன் தென்னாபிரிக்க அரசு தன்னுடைய கைக்கூலியான தென்மேற்கு ஆபிரிக்க பொலிஸ்படை மூலம் சமாதானத்துக்கான சூழ்நிலைகளை சேதப்படுத்தும் முயற்சியில் தொடர்ந்தும் ஈடுபட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

அங்கோலா

சமாதானத்தை நோக்கி அங்கோலா....

1975ம் ஆண்டு அகோலா விடுதலை பெற்ற காலத்திலிருந்து அங்கோலாவின் ஆளும் மார்க்சிச அரசுக்கு எதிரான எதிர்புரட்சி நடவடிக்கைகளில் யோனஸ் சுவாம்பியும் அவரது UNITA படையும் ஈடுபட்டு வந்தது. இந்த எதிர்ப்புரட்சி நடவடிக்கைகளுக்கு அமெரிக்க, பிரிதானிய ஏகாதிபத்தியங்கள் வெகுதாராளமாகவே உதவி வந்தன.

இதன் காரணமாக அங்கோலாவின் பொருளாதார முன்னேற்றங்கள் தடைப்பட்டன. ஏராளமான மக்கள் இந்த உள்நாட்டுப் போரில் பலியாகும் நிலை ஏற்பட்டது.

தற்போது வன்செயல்களால் நாட்டுக்கும் மக்களுக்கும் ஏற்பட்டிருக்கும் பாதிப்புகளை உணர்ந்து கொண்ட அரசாங்கமும், UNITA வும் ஸெயர் நாட்டில் நடை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பெற்ற சந்திப்பு ஒன்றின்மலம் சமாதான ஒப்பந்தம்ஒன் றைமேற்கொண்டுள்ளனர். இதன்படி அங்கோலாவை இது வரைகாலமும் பாதுகாப்பில் உதவிவந்த 50,000 கியூ பாத் துருப்புக்கள் 1991ம் ஆண்டு யூலை மாதமளவில்- அங்கோலாவை விட்டு நீங்குமென்றும் அதேசமயம் உட னடியாகவே UNITA அரசுக்கெதிரான சகல இராணுவ நடவடிக்கைகளையும் நிறுத்துமென்றும் அங்கோலாத்தலை வர் சாந்தோசும், UNITA தலைவர் சுவாம்பியும்விடுத்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

எதியோப்பியா.

எதியோப்பியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற்சிக்கு எரித்திரிய போராளிகளும் தயார்.

கடந்த 28 வருடங்களாக எரித்திரிய மக்களின் விடுதலைக்காக எதியோப்பிய அரசுக்கெதிராகபோரா டிவரும் எரித்திரிய மக்கள் விடுதலை முன்னணி (EPLF) எதியோப்பியாவில் சமாதானத்தை ஏற்படுத்தும் முயற் சிகளுக்கான பேச்சு வார்த்தைகளுக்கு வருமாறு எதி யோப்பிய அரசுக்கு அழைப்பு விடுத்துள்ளது.

எரித்திரியாவுக்கான பூரண விடுதலை அல்லது பிரதேசசுயாட்சி அல்லது சமஷ்டி அமைப்பு என்ற அடிப் படையில் அரசுடனான பேச்சு வார்த்தைகள் அமைய முடி யும் என்று ஈ.பி.எல்.எப் இன் செயலதிபர் இஸியாஸ் அஃபேவேக்கி கூறியுள்ளார். அதேசமயம் எதியோப்பி- யாவில் அமைதியை ஏற்படுத்தும் முயற்சிகளில் ஈடுபடுமா றும் இதர ஆபிரிக்க நாடுகளும் எதியோப்பிய அரசை வற்புறுத்திவருகின்றன.

www.tamilarangam.net

கியூபா.

போதை மருந்து கடத்தலில் ஈடுபட்ட இராணுவ அதிகாரிகளுக்கு மரணதண்டனை.

கொலம்பியாவின் பிரபல போதை மருந்து உற்பத்தியாளர்களுடன் தொடர்பு கொண்டு போதைமருந்து கடத்தலில் ஈடுபட்ட கியூபாவின் புகழ்பெற்ற உயர்இராணுவ அதிகாரி ஜெனரல் சான்சேயுக்கும் அவரது உதவியாளர்களாகிய மேலும் மூன்று உயர் இராணுவ அதிகாரிகளுக்கும் கியூபாவின் இராணுவ நீதிமன்றம் மரண தண்டனை வழங்கியுள்ளது. கியூபாவின் மக்களையும், கியூபாவின் கம்யூனிசப் புரட்சியையும் ஏமாற்றி துரோகம்செய்ததற்கான தண்டனையே இது என நீதிமன்றம் குறிப்பிட்டுள்ளது.

பிரான்ஸ்

நேரடி நடவடிக்கைக் குழு முக்கிய உறுப்பினர்களுக்கு ஆயுள் தண்டனை

பிரான்சில் நடைபெற்ற பல கொலைகள், வங்கிக் கொள்ளைகள் ஆகியவற்றுக்குப் பொறுப்பான நேரடிநடவடிக்கைக் குழுவின் முக்கிய தலைவர்களாகிய ஆந்திரேஒலிவியே, மக்சிம் பெரொற், எமிலே பலான்ரஸ் - ஆகிய மூவருக்கும் பரிசின் விசேட நீதிமன்றம் ஆயுள் தண்டனையை வழங்கியுள்ளது. இக்குழு உறுப்பினர் இருவருக்கு 20 மற்றும் 18 வருடகாலச் சிறைத் தண்டனையும் - மேலும் 13 பேருக்கு குறுகிய கால சிறைத் தண்டனையும் வழங்கப்பட்டுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

* பொருளாதார மற்றும் பாலியல் ஊழல்களில் சிக்கித் தவிக்கும் ஜப்பானிய அரசின் அமைச்சரவை உறுப்பினர்கள் பெண்கள் அரசியலில் ஈடுபடுவதை கண்டித்துள்ளனர். சமீபத்திய இடைத் தேர்தலில் ஆளுங்கட்சி உறுப்பினர் ஒருவர் சோசலிசக் கட்சியின் பெண் வேட்பாளரால் தோற்கடிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

* மாலை தீவு அரசாங்கம் இந்திய அரசுடன் பாதுகாப்புஒப்பந்தம் ஒன்றை மேற்கொள்ளஉள்ளது. கடந்த நவம்பர்மாதத்தில் மாலைதீவில் நடந்த ஆட்சிக் கவிழ்ப்பு முயற்சியை இந்தியா முறியடித்ததை தொடர்ந்து மாலைதீவு அரசின் வேண்டுகோளுக்கிணங்க இந்தியப் படையினர் 500பேர்மா- மாலைதீவில் இருந்துவருகின்றனர்.

* இந்திய-நேபாள ஒப்பந்தத்தை மீளப் புதுப்பிப்பதுதொடர்பாக ஏற்பட்ட முரண்பாடுகள் காரணமாக இருநாடுகளுக்குமிடையிலான உறவுகள் சீர்குலைந்ததும் இந்தியா, நேபாளத்தின் மீது மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதாரத் ததடையை விதித்ததும் தெரிந்ததே. இதனல் இந்தியாவின் இடத்தை சீனவுக்கு அளிக்க எண்ணி நேபாள அதிகாரிகள் சீன அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது சீன அரசு இவ்வேண்டுகோளை ஏற்கமறுத்ததுடன் மீண்டும் இந்தியாவை அணுகி உறவுகளை சுமுகமாக்குமாறு நேபாளத்துக்கு ஆலோசனை வழங்கியுள்ளது.

. . . . . . . . . . . . . . . . . . . . . . . . .



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஸ்ரீலங்கா அரசின் தன்னிச்சையான முடிவுகளை நாம் ஏற்க மாட்டோம்.

– தோழர் பத்மநாபா –

சிறீலங்கா அரசாங்கம் இந்திய படையினர் 29.7.89 முன்னர் நாட்டைவிட்டு வெளியேறவேண்டும்' என்று தன்னிச்சையான பிரகடனம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இது எந்த வகையிலும் எம்மைக் கட்டுப்படுத் – தாது. இது தொடர்பாக நாம் எவ்வித சந்தேகத்து குமிடமின்றி சில விடயங்களை தெளிவுபடுத்த விரும்புகிறோம். சிறீலங்கா அரசாங்கம் மேற்கொள்ளும் இத் தகைய அணுகுமுறைகள் நாட்டை பிளவை நோக்கியே இட்டுச் செல்லும் என்பதை சிறீலங்கா அரசுக்கு கூற விரும்புகிறோம்.

சிறீலங்கா அரசாங்கம் தன்னுடைய விருப்பத் திற்கேற்ற முடிவுகளை தன்னிச்சையாக எடுக்க முடியும் என்றால் இதே போலவே மற்றவர்களும் தன்னிச்சை யான முடிவுகளை எடுக்கமுடியும் என்பதை சிறீலங்கா அரசு புரிந்துகொள்ள மறக்கக்கூடாது. ஆனால், இத்த கைய முடிவுகளோ அல்லது அணுகுமுறைகளோ எந்த ஒரு பிரச்சனைக்கும் தீர்வைத் தராது என்பதைசுட்டிக் காட்ட வேண்டியதும் எமது கடமையாகும்.

அதுமாத்திரமல்ல இதுபோன்ற எந்த முடிவும், எடுப்பதற்கு முன்னால் சிறீலங்கா மத்திய அரசாங்கத்தி னால் மக்களால் தெரிவு செய்யப்பட்ட வடக்கு–கிழக்கு மாகாண அரசு எந்த சந்தர்ப்பத்திலும் கலந்தாலோ



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

சிக்கப்படவில்லை. சிறீலங்கா அரசாங்கம் தன்னிச்சை யாகவே இந்த முடிவை எடுத்தது. அது மாத்திரமல்ல இந்திய- சிறீலங்கா ஒப்பந்தத்தில் ஒரு தரப்பில் கை யெழுத்திட்ட இந்திய அரசு கூட இந்த விடயத்தில்கலந் தாலோசிக்கப்படவில்லை.

ஒப்பந்தத்தின் அடிப்படையிலும், சிறீலங்கா அர சின் அழைப்பின் பேரிலுமே இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கைக்கு வந்தனர். ஆனால், இந்த ஒப் பந்தம் கைசாத்திடப்பட்டபோது சிறீலங்கா அர சாங்கம் இந்த ஒப்பந்தத்திற்கு விசுவாசமாக நடக் குமா என்ற சந்தேகத்தை நாம் எழுப்பினோம். அது இப்போது உண்மையாகிவிட்டது. சிறீலங்கா அரசாங்கத் தின் இவ்வகையான அணுகுமுறையானது அங்கீகரிக்கப்- பட்ட நடைமுறைகளுக்கு விரோதமானது மாத்திரமல்ல சர்வதேச சட்ட விதிகளையும் அலட்சியப்படுத்துவதாய் அமைகிறது.

வடக்கு - கிழக்கில் மக்களால் தெரிவு செய் யப்பட்ட மாகாண அரசாங்கம் ஒன்று பதவியேற்றுஆறு மாதங்களுக்கு மேலாகியும் ஏற்கனவே ஏற்றுக்கொண்ட படி இன்னும் முழுமையான அதிகாரங்கள் வழங்கப்பட- வில்லை. சிறீலங்கா அரசாங்கம் தாமதப்படுத்தும்தந் திரத்தைப் பாவிப்பதுடன் மாகாண அரசாங்கத்தின் - சாதாரண அதே சமயம் உற்சாகமான நடவடிக்கைக ளைப் நாசப்படுத்தும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டிருக் கிறது. இந்தச் சமயத்தில் மாகாண அரசாங்கத்திற்கு முழுமையான அதிகாரங்களும் வழங்கப்படும்வரையில் ,

www.tamilarangam.net

தமிழ்மக்களுக்கான பாதுகாப்பைவழங்கும் பொறுப்பை மாகாண அரசு ஏற்றுக்கொள்ளும் வரையில் இந்திய அமைதிகாக்கும் படையினர் இலங்கையை விட்டு வெளி-யேறக்கூடாது. இது எமது விருப்பம் மாத்திரமல்லஈழ மக்களது விருப்பமும் இதுவே.

எங்களுக்குச் சொந்தமான சட்டம் ஒழுங்கு முறைகளின் கீழ் மாகாண அரசின் கட்டுப்பாட்டின் கீழ் அதன் அதிகாரங்களைப் பாவித்து அமைக்கப்பட்டபொலீஸ் படை எமது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வரையில் இந்திய அமைதிகாக்கும் படையினர்எமது நாட்டை விட்டு வெளியேற்றுவதை நாம் ஏற்றுக்கொள்ளமாட்டோம்.

சிறீலங்கா அரசாங்கமும் அதனுடைய பொலீஸ் மற்றும் இராணுவப் படைகளும் தமிழ் மக்களுக்குஇழைத்த கொடுமைகளையும் அநீதிகளையும் தமிழ் மக்கள் மறந்துவிடிவில்லை. சிறீலங்கா அரசாங்கத்தின் மீதும் அதனுடைய அதிகார இயந்திரங்கள் மீதும் எமது மக்கள் கொண்டிருக்கும் சந்தேகமும், வெறுப்பும் இன்னும் எம்மக்களின் மனங்களின் நிறைந்தே இருக்கிறது. அதனால் தான் அதே சிறீலங்கா இராணுவமோ, பொலிசோ வடக்கு கிழக்கில் நுழைவதை அவர்கள் விரும்பவில்லை. இது குறித்து எமது மக்கள் அதிகமாக கவலையுறுகிறார்கள்.

இதன் காரணமாகத்தான் எமது மக்கள்இந்திய சிறீலங்கா ஒப்பந்தத்தின் மீது தங்கள் நம்பிக்கைவிதைகளை புதைத்து நமது வாழ்வில் அமைதியையும் ஜனநா

www.tamilarangam.net

யகத்தையும் ஏற்படுத்துவார்கள் என்றே இந்திய அமைி
திகாக்கும் படையினரை வரவேற்றனர்.

எமது மக்களின் எதிர்பார்ப்புக்களையும், நம்
பிக்கையையும் சிதைக்க சிறீலங்கா அரசு முயற்சிகளுக்
கும் இந்தச் சமயத்தில் இது போன்ற எதிர்ப்புக்களை
நாம் எந்த இடத்திலும், எந்த வகையிலும் எதிர்
கொள்ளத் தயாராக உள்ளோம் என்பதை அறியத்தரு
கிறோம்.

ஈழ விடுதலைப் போராட்டத்தில் ஏற்பட்ட
குழப்பங்களுக்கும், பின்னடைவுகளுக்கும் தமிழீழ விடுத-
லைப் புலிகளே காரணம். இத்தகைய ஒரு கவலைக்கு
ரிய நிலையில் தான் எமது மக்களுக்கு உடனடியாக -
தேவைப்பட்ட அமைதியையும், சமாதானத்தையும்அடை
வதற்காக நாம் இந்திய சிறீலங்கா ஒப்பந்தத்தைஆத
ரித்தோம். அதே சமயம் எமது மக்களுக்கு ஜனநாய
கமும் அமைதியும் கிடைப்பதற்கான போராட்டத்தை
நாம் தொடர்கிறோம்.

இத்தகைய ஒரு கட்டத்தில்தான் நாம் முழு
உலகுக்கும் மீண்டும் ஒரு விடயத்தைச் சொல்ல விரும்பு
கிறோம். தமிழ் பேசும் மக்களின் நலன்களுக்கு விரோ
தமாகக் கிளம்பும் எந்த எதிர்ப்பையும் நாம் எந்த
வகையிலும் எதிர்கொள்வோம்.

சிறீலங்கா அரசாங்கத்தின் தன்னிச்சையான
எந்த முடிவையும் ஏற்றுக்கொண்டு வெறுமனே கைகள்

www.tamilarangam.net

கட்டப்பட்ட பார்வையாளர்களாக நாம் இருக்கப் போவதில்லை.

தோழர். க. பத்மநாபா,
செயலாளர் நாயகம்,
ஈழமக்கள் புரட்சிகர விடுதலை
முன்னணி.

---

## 13வது சர்வதேச மாணவர் - இளைஞர் விழா.



விழாவை ஆரம்பித்து வைக்கும் வட கொரிய ஜனாதிபதி கிம் இல் சுங்

13வது சர்வதேச மாணவர் - இளைஞர் விழா கடந்த யூலை மாதம் 1ம் திகதி தொடக்கம் 8ம் திகதி வரை வடகொரியாவின் பியோங்யாங் நகரில் நடைபெற்றது.

வட கொரிய ஜனாதிபதி கிம் இல் சுங்கினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட இவ்விழா ஒரு பெரும் அரசியல் - கலை விழாவாக அமைந்தது. உலகின் பல நாடுகளைச் சேர்ந்த பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர் - இளைஞர் பிரதிநிதிகள் இதில் கலந்துகொண்டனர். கலை நிகழ்ச்சிகளில் 75 ஆயிரத்துக்கும் மேற்பட்ட கலைஞர்கள் பங்குகொண்டனர்.

இவ்விழாவில் ஈழ மாணவர் பொதுமன்றத்தின் (GUES) சார்பில் தோழர் சுகியும், மலையகத் தோழர் பிரகாஷும் கலந்து கொண்டனர்.

www.tamilarangam.net

# சீன ஒரு பாடம்

அடக்குமுறைக்கு நிறங்கள் கிடையாது. அடக்குமுறைக்கு இடது வலது என்ற அரசியல் பிரிவுகளோ அல்லது கம்யூனிசம், முதலாளித்துவம் என்ற சித்தாந்த வேறுபாடுகளோ கிடையாது. காலம் காலமாக தேசங்கள் தோறும் நிரூபிக்கப்பட்டுவரும் இந்த உண்மை இம்முறையும் சீன மக்களின் இரத்த சாட்சியங்களால் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

பொருளாதார சீர்திருத்தம் என்ற பெயரில் கம்யூனிச கொள்கைகளிலிருந்து தடம்புரண்ட சீனத் தலைவர் டெங் சியாபெங் ஏகாதிபத்தியங்களின் சுரண்டலுக்கு சீனாவை பலி கொடுத்தார். பொருளாதார சுதந்திரம் என்ற பெயரில் ஏகாதிபத்தியங்கள் மலிந்த கலாச்சார மற்றும் சகலதரப்பட்ட விஷவித்துக்களையும் சீன மக்கள் சமூகத்தினுள் விதைத்து கட்டுப்பாடான அவர்களதுவாழ்க்கையை சீர்குலைத்தன.

அதேசமயம் அரசின் பொருளாதார சுதந்திரக் கோஷம் ஏற்படுத்திய மயக்கம் அருகில் சோவியத் யூனியனில் கோர்பச்சேவ் செய்துவரும் சீர்திருத்தங்கள் ஏற்படுத்திய தாக்கம் அனைத்தும் ஒன்றிணைந்து அதிக ஜனநாயகம் கோரும் போராட்டத்தை நோக்கிமாணவர்களை உந்தியது.

www.tamilarangam.net

அமைதிப் போராட்டங்கள், ஆர்ப்பாட்டப் போராட்டங்கள், உண்ணாவிரதப் போராட்டங்கள் என்று படிப் படியாக கிளர்ந்தெழுந்த மாணவர்களுடன் பல நகரங்களில் மக்களும் இணைந்து கொண்டனர்.

ஆனால் வீரமிக்க போராட்டமொன்றை ஆரம்பித்தவர்கள் விவேகமாக நடந்தனரா என்பது கேள்விக்குறி தான். மக்கள் இராணுவம் மக்களைக் கொல்லாது. மக்கள் அரசாங்கம் மக்களை தாக்காது என்றெல்லாம் இந்த மாணவர்கள் கனவுகளை சுமந்தனர்.

ஆனால், சீன மாணவர்களின் கனவுகளையெல்லாம் சீனத் தலைவர் டெங்கும், பிரதமர் லீ பிங்கும் தியனன்மென் சதுக்கத்தில் உடைத்தெறிந்தனர். தம்முடைய சொந்த மக்களையே ஆயிரக் கணக்கில் கொன்று தமதுஅதிகார வெறியை தீர்த்துக் கொண்டனர். சீனாவின் மக்கள்இராணுவம் தன்னுடைய மக்களின் இரத்தத்தையே தன்கரங்களில் பூசிக் கொண்டது.

ஆயுதம் ஏந்தாமல் அமைதிப் போராட்டம் நடத்திய மக்களுக்கும், மாணவர்களுக்கெதிராக சீன அரசுநடந்துகொண்டமுறை இந்த நூற்றாண்டின் மிகமோசமானஅடக்குமுறை என்றால் போராட்டத்தில் பங்கு கொண்டமாணவர்களைத் தேடிப்பிடித்து அவர்களுக்கு மரண தண்டனை வழங்கிவருவது, இந்தநூற்றாண்டின் மோசமானமிலேச்சத் தனம்.

அதிகாரம் துப்பாக்கிக் குழலிலிருந்து பிறக்கிறது என்ற தோழர். மாவோவின் கூற்றை இன்றைய சீனாவின் அதி

www.tamilarangam.net

கார வெறிபிடித்த அரசாங்கமே நிரூபித்திருக்கிறது.

அதேசமயம் அனுபவமற்றவர்களால் நடத்தப்படும் போராட்டங்கள் உறுதியற்றன. வெற்றியைப் பெற்றுத் தராது என்பது சீன மாணவர்கள் மூலம் தெளிவாக்கப் பட்டிருக்கிறது.

அதிக ஜனநாயகம் கோரி அமைதிப் போராட்டங்கள் நடத்திய அப்பாவிகளை துரோகிகளாகவும் தேசத்தின் விரோதிகளாகவும் பட்டம் சூட்டி மரணதண்டனைவிதித்து சீன அரசு தன் கரங்களில் படிந்திருக்கும் சீன மக்க ளின் இரத்தத்தை துடைத்துக் கொண்டிருக்கும்வேளையில் சீனமாணவர்கள் அமெரிக்காவுக்கும், மேற்கு ஐரோப் பிய நாடுகளுக்கும் விசா பெற்று வெளியேறுவதில் தீவி ரமாயிருக்கும் நிலையும் கவலைக்குரியதுதான்.

அதேசமயம் இந்தப் படுகொலையின் நாயகனை டெங் சியோ பெங்கை இதுவரை காலமும் முற்போக்காளனு கவும், சீர்திருத்தவாதியாகவும் உருவகப்படுத்திபுகழ்ந் துவந்த முதலாளித்துவ நாடுகளும், பத்திரிகைகளும்சீனு வின் அதிகார வெறிபிடித்த ஆளும் பொறியமைப்பின் - கொலைபாதகத்தை கம்யூனிசத்தின் கொலைவெறித்தன மாய் பிரகடனப்படுத்துகின்றன. மாணவர்களின் கிளர்ச் சியை கம்யூனிசத்துக் கெதிரான உலகளாவிய எதிர்ப்பு என்று பொய்யுரைக்க ஆரம்பித்துள்ளன.

எது எப்படியிருந்தபோதிலும் இப்போராட்டம்உலகுக்கு ஒரு தெளிவான பாடத்தை புகட்டியுள்ளது. ஆற்றல் மிக்

www.tamilarangam.net

மிக்க வர்க்கத்தால் அணிவகுக்கப்படாத போராட்ட டங்கள் இலகுவாக நசுக்கப்படும் என்பதை மாத்திர மல்ல 'அடக்குமுறை' சித்தாந்தங்களை கடந்தது என்பதையும் இதன் மூலம் உணரக்கூடியதாயுள்ளது.

## நிக்கரகுவா - புரட்சிக்கு வயது பத்து!



நிக்கரகுவாவே - எங்கள் ப்ரியமான தேசமே

புரட்சிக்கு முன்னர் அடக்குமுறையாளர்கள்
உன்மீது பதித்த இரத்த காயங்கள்
எண்ணற்றவை.

புரட்சிக்காக நீ கொடுத்த உயிர்ப்பலிகள்
எண்ணற்றவை.

புரட்சியின் பின்னர் உன்னை மண்டியி-
டச் செய்ய ஏகாதிபத்தியம் செய்த
சதிகளும் எண்ணற்றவை.

இத்தனை துன்பங்களுக்கு மத்தியிலும் எழுந்து
நிமிர்ந்து நிற்கும் உன் தேசமக்களுக்கு எம் வாழ்த்துக்கள்

www.tamilarangam.net

# சாபம்

அம்மா !
உன்னை ஒன்று கேட்பேன்
ஒளிக்காமல் சொல்.

நானும் அவனும்
உன் கருப்பையிலிருந்துதானே
உருக்கொண்டோம்.
ஆயினும்
அவனது கடைவாயில் கோரப்பற்களும்
விரல்களில் விகாரமாய் கூர் நகங்களும்
தலையில் எருதின் கொம்புகளும்
எப்படி முளைத்தன?

உடன் பிறந்தவனின்
இரத்தம் குடிக்கும் காட்டேறியாக
அவன் மாறியதெப்படி?

அவனும் நானும் ஒரே
அரிச்சுவடிகளைத் தானே எழுதினோம்
ஆயினும்
அவன் சுவடு பட்ட இடங்களில்
பூக்கள் ஏன் வாடுகின்றன.

அம்மா !
எனக்கிது புரியவில்லை இன்னும்.
உனக்குத் தெரிந்ததை
ஒளிக்காமல் சொல்

ஹம்சத்வனி

முடிவிலும் அழியாதது

www.tamilarangam.net

இன்று நாம் தனிநாடு கோரும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதற்கு இன்றைய சிறிலங்கா அரசே பொறுப்பாகும்.

நாட்டின் பெரும்பான்மை மக்களுடன் இணைந்து வாழ வேண்டும் என்று எண்ணினோம். இதற்காக எமது முழு ஆதரவினையும் இதய சுத்தியுடன் வெளிப்படுத்தினோம்.

எமது இந்த எண்ணத்தை ஆட்சியாளர்கள் பலவீனமாக எடைபோட்டு விட்டார்கள். எமது பெருந்தன்மையை மதியாது தமிழ் மக்களது அடிப்படை உரிமைகளை வழங்க மறுத்து வந்தார்கள்.

இந்த நிலையில் நாம் எமது இலக்கை நோக்கி நடைபோட, எமது இலட்சியத்தை அடைந்திடத் தயாராகிக் கொண்டிருக்கிறோம். தமிழ், முஸ்லிம் சகோதரர்களை அணைத்துக் கொண்டே எமது நோக்கத்தை அடைந்திடச் செயற்படப் போகிறோம்.

**தோழர் க.பத்மநாபா**

வெளியீடு: ஈழ மக்கள் செய்தித் தொடர்பு நிலையம்.
பிரான்சு.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்